1973 மார்ச் 26]

இருக்கக்கூடிய உருக்குத் தொழிற்சாலைக்கு நாம் இங்கே இரும்பு தாதுப் பொருளை வெட்டி எடுக்கத் தொடங்கினால் அனுப்பி வைக்கலாம் அல்லவா? ஆகவே, அவற்றை வெட்டி எடுக்க அரசு கவனிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : வட மாநிலத்தில் நிறைய ஹாமடைட் ஓர் கிடைப்பதனால், நம் மாநிலத்தில் கிடைக்கிற மாக்னடைட் ஓர் பற்றி அவர்கள் கவலைப்பட மாட்டார்கள்.

குளூகோஸ் தொழிற்சாலை

*516 வினா—திரு. என். கிட்டப்பா : } மாண்புமிகு தொழிற் துறை
திரு. கி. செயராமன் : }
அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குளூகோஸ் தொழிற்சாலையொன்று ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. நா. வீராசாமி : குளூகோஸ் தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டுமென்றால்கூட மத்திய அரசின் அனுமதியைப் பெற்றே துவங்க வேண்டும் என்கிற தன்மை இருக்கிறது. இன்றைக்கு மாநிலத்தில் உள்ள ஆஸ்பத்திரிகள், குழந்தைகள் ஆகியவர்களுக்கு மலிவான விலையில் குளூகோஸ் கிடைக்க வசதியாக மத்திய அரசிடம் அனுமதி பெற்று, மாநில அரசே அங்கங்கே இண்டஸ்ட்ரியை ஏற்படுத்த தொழிற்சாலை வைக்க முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போது உடுமலைப்பேட்டையில் ஒன்றும், சென்னையில் ஒன்றும் தொடங்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. உடுமலைப்பேட்டையில் ஒன்று நடக்கிறது.

திரு. என். கிட்டப்பா : இனிமேலாவது பொதுத் துறையில் இல்லா விட்டாலும், தனியார் துறையில், அல்லது தனியார்—அரசு கூட்டுத்துறையில் துவங்க ஊக்கமளிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நான் ஏற்கெனவே –நாள் ஒன்றுக்கு 50 டன் தயாரிக்கிற ஒரு தொழிற்சாலையும், ஆண்டு ஒன்றுக்கு 1,500 டன் தயாரிக்கிற ஒரு தொழிற்சாலையும் இரண்டு ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன என்று சொன்னேன்.

திரு. வி. பழனிவேலு : இது குழந்தைகளுக்கும், தாய்மார்களுக்கும் மிகவும் தேவையாக இருப்பதாலும் சேலம் மாவட்டத்தில் மரவள்ளிக் கிழங்கு நிறைய உற்பத்தி செய்யப்படுவதாலும், அதிலிருந்து கிடைக்கும் ஸ்டார்ச்சு தரமுள்ளதென கண்டுபிடிக்கப்பட்டதால் க்ளூகோஸ் பாக்டரியை ஆரம்பிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இன்னும் அதிகமான அளவில் பாக்டரியை ஏற்படுத்தினால் நம் வேதைக்கு மேலேயே போய்விடும் என்கிற நிலை இருக்கிறது. ஆனால் சேலம் மாவட்டத்தில் ஆட்சித்தலைவர் கூட்டுறவுத் துறையில் டாபியோக்கோவை கொண்டு அங்கே தயாரிக்க ஒரு திட்டம் கொடுத்திருக்கிறார். அதைப் பரிசீலித்து வருகிறோம்.

திரு. ஆ. பரந்தாமன் : தமிழ்நாட்டில் அதிகமான மருத்துவ மனைகள் இருப்பதனாலே இங்கே அதிக அளவில் க்ளூகோஸ் தேவைப்படுவதனால் மேலும் பல தொழிற்சாலைகளை நிறுவ அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போதுதான் அதற்கு விளக்கம் தந்தேன்.

Technological University.

*** 506 Q.—Thiru N. K. PALANISWAMY, Thiru K. A. WAHAB, Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :**

(*a*) whether there is any proposal to start a Technological University in this State ; and

(*b*) if so, the details of the same?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) மத்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. என். கே. பழனிசாமி : மொத்தச் செலவு என்ன ஆகும்? மத்திய அரசின் பங்கு என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இதற்கு மத்திய அரசின் ஒப்புதலும், பல்கலைக் கழகத்தின் ஒப்புதலும் தேவை. அது கிடைத்தால் இந்தப் பல்கலைக் கழகத்தின் கட்டிடங்கள், ஆய்வுக்கூடங்கள், நூல் நிலையங்கள் ஆகியவற்றுக்கு பல்கலைக்கழக மானியக் குழு 50 சதவீதம் உதவி அளிக்கும். முதலில் அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது.

Thiru N. DENNIS—May I know the time when this University will be started?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மத்திய அரசின் அனுமதி கிடைத்துவிட்டால் வருகிற ஆண்டில் இருந்தே தொடங்கலாம்.

திரு. நா. வீராசாமி : ஒரு நாடு தொழில் வளம் பெருக இதுபோன்ற டெக்னலாஜிகல் யுனிவர்சிடி அமைக்கப்படுவது மிகவும் அவசியமாகும். இது பற்றி நமது அரசு மத்திய அரசாங்கத்திற்கு எப்போது எழுதிற்று ?